# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

## உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா.ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூப | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 95 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# சங்க இலக்கியத்தில் தழை ஆடை

**அ.நித்யா,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

தமிழ்ச் சமூகத்தின் மொழி, இலக்கியம், இலக்கணம், பண்பாடு, சமயம், சடங்கு, வழிபாடு உள்ளிட்ட இன்னும் பிற மரபுகள் மிக நீண்ட நெடிய அறுபடாத தொடர்ச்சி கொண்டவையாகும். இத்தொடர்ச்சியில் மாற்றமும் நிகழ்ந்து வந்துள்ளது.

சங்க காலத்தில் தொல்குடிகளிடம் பரவலான பயன்பாட்டில் இருந்த தழையாடை இரண்டு நிலைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. ஒன்று அதன் 'தொன்மை' சார்ந்த விடயமாகும். இரண்டாவது தழையாடை உள்ளிட்ட இன்னும் பல கூறுகள் தமிழரின் மரபு அறிவைச் சுட்டி நிற்கின்றன. இன்றைய உலகளாவிய அறிவுமுறையில் அந்தந்தச் சமூகத்தின் மரபு அறிவே அதற்கான அடையாளத்தைக் கொடுக்க முடியும். இந்நிலையில் தனித்துவமான தொல் அடையாளங்களை இனங்காணுவதும் மீட்டெடுப்பதும் ஒவ்வொரு சமூகத்திற்குமான சுய தேடுதலாகும்.

**சங்க இலக்கியங்களில் தழையாடை**

மனித குலத்தின் தேவைகளில் உண்பதும் உடுப்பதும் ஆகிய இரண்டும் மிக முக்கியமான தேவைகள் என்பதைப் புறநானூறு,

**'உண்பது நாழி, உடுப்பவை இரண்டே' (189)**

எனக் கூறுகிறது.

சங்கப் பாக்களில் உடை எனும் பொருளில் ஆடை எனும் சொல் பயின்று வருவதைக் காணமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் உடை, ஆடை ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. 'உடு' எனும் வேர்ச்சொல்லிருந்து உடுத்துதல் வந்துள்ளது. உடம்பை அடுத்திருப்பதால் 'ஆடை' என்று பெயர் பெற்றது. இலையை ஆடையாகத் 'துன்னம்' செய்து உடுத்தியதே தொல் உடையாக அமைந்தது இலையைத் துன்னுதல் நெசவின் தொடக்கமாக அமைந்தது. சங்க காலத்தில் துன்னுதல் என்றால் பொருத்துதல் என்று பொருள் தைத்தல் எனும் சொல் பின்னாளில் வந்தது.

சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை தமிழரின் தொன்மையான ஆடை தழையே. தழையாடை அக்காலத்தில் பரவலான பயன்பாட்டைப் பெற்றிருந்தால் ஆடையைத் தழை என்றே அழைத்துள்ளனர் (குறுந். 295) (நற்.359). தழை என்றால் ஆடை என்று புரிந்துகொள்ளும் அளவிற்கு அது அந்நாளில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

சங்க காலம் தொடங்கி பக்திக் காலம் வரையிலான காலகட்டத்தில் ஆடையைக் குறிக்க எண்ணற்ற சொற்கள் தோன்றியுள்ளன. ஆனால் தழையாடையானது தழையுடை, பகைத்தழை, மடிவை, குழை எனும் பெயர்களில் பெரும்பாலும் சுட்டப் பெற்றுள்ளன. 'தழை' என்பது பரவலான பெயர். 'மடிவை' என்றும் கூறப்பெற்றுள்ளது (அகம்.226.3) தழையை மடித்து, தொடுத்து அணிந்ததால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் (பதி.27)

**திணைகளுக்கேற்ற தழையாடை**

எந்தவொரு பண்பாடும் அதன் சுற்றுச் சூழலால் நிர்ணயிக்கப்படும் என்பது பண்பாட்டுச் சூழலியல் அறிஞர்களின் வாதமாகும். புழந்தமிழகத்தில் நான்கு தனித்த நிலவியில், பூகோள், சுற்றுச் சூழியல்கள் இருந்துள்ளன. திணைவழி அமைந்த சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் நான்கு வகை வாழ்க்கை முறையை விவரிக்கின்றன. தழையாடைகளும் கூட திணை வேறுபாடுகளைக் காட்டுகின்றன.

நிலத்திற்கேற்ப தழையுடைகள் மாறுபட்டிருந்தன. தழையுடைகள் பெரும்பாலும் நெய்தல், ஞாழல், ஆம்பல், குவளை, செயலை, நொச்சி முதலியவற்றால் தொடுக்கப்பட்டன.

**"உடுக்கும் தழை தந்தனனே, யாம் அ∴து**
**உடுப்பின் யாய் அஞ்சுதுமே, கொடுப்பின்**
**கேளுடைக் கேடு அஞ்சுதுமே" (நற்.359: 4-6)**

எனும் பாடல் திணை வேறுபாடுகளை எடுத்துரைக்கும் ஒரு சிறந்த பாடலாகும். தலைவன் கொடுத்த கையுறையைத் தோழி ஏற்றுக் கொண்டு தலைவியிடம் சென்றாள். இன்று உன் தலைவன் தழை தந்தனன் இதனை உடுத்தினால் அன்னை சினம் கொள்வாள். உடுத்தவில்லை என்றால் தலைவன் வருந்துவான் தெய்வமுள்ள மலைப் பக்கத்துத் தழையாதலின் அதனை விலக்குவதும் பிழையாகும். இதற்கிடையில் இத்தழையுடை வாடாமலிருக்க வேண்டும் என்று தோழி கூறுவதே இப்பாடலின் கருத்தாகும்.

ஒவ்வொரு திணையிலும் சில தாவரங்களின் இலைகளே ஆடைகளாகச் செய்யப்பெற்றன என்பதை நன்கு அறியமுடிகின்றது. குறிஞ்சித் திணையில் குறத்திகள் தழையாடை அணிந்தும் (ஐங்.256:1-2) மரவுரி அணிந்தும் (நற்.64:4-5) காணப்பட்டதைப் பின்வரும் தொகை நூல்கள் காட்டுகின்றன.

**"குன்றக்குறவன் காதல் மடமகள்**
**வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி" (ஐங். 256:1-2)**
**"மரல் நார் உடுக்கை மலைஉறை குறவர்**
**அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்" (நற்.64:4-5)**
**"____ ___ ____ கடுந்திறல்**
**பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்**
**கடவுள் ஓங்கு வரைக்கு ஒக்கி, குறவர்**
**முறித்தழை மகளிர் மடுப்ப, மாந்தி**
**அடுக்கல் ஏனல் இரம்புனல் பிறந்துழி" (அகம்.348:6-10)**

எனும் அடிகள், கடிய வேகங்கொண்ட பாம்பினது சீற்றத்தை ஒத்த புளித்த கள்ளினை முதலில் ஓங்கி உணர்ந்த உச்சியையுடைய தெய்வம் வாழும் மலைக்குப் படைத்து பின்னர் தளிரால் ஆய தழையுடை அணிந்த மகளிர் உண்பிக்க, அதனைப் புனங்காக்கும் குறவர்கள் வயிறார உண்டு, அம்மயக்கத்தால் தினைப் புனம் காக்க மறந்தனர் எனும் விவரிப்பில் கள் உண்பித்த பெண்கள் இளந்தளிர்களையுடைய தழையாடை அணிந்திருந்ததை அறியமுடிகிறது.

நெய்தல் திணையில் ஞாழல், நெய்தல், காவி (கருங்குவளை) ஆகிய இலைகளைக் கொண்டு தழையுடைகளைக் கோர்த்துள்ளனர். இவற்றைப் பழையர் மகளிரும், பிற நுளைச்சியரும் விரும்பி அணிந்துள்ளனர். (நற்.96:369:7-10, அகம்.320) நெய்தல் நிலத்து இளமகளிர் ஞாழற் பூவை அணிந்து மகிழ்வார்கள் கொய்தற்கு ஞாழல் மலரில்லாத போது அம்மரத்தின் தழையைக் கொய்து அணிந்து கொள்வார்கள் என்பதை **'மலர் இல் மகளிர், ஒண் தழை அயரும்'** (ஐங்.147) என்ற வரிகள் வழி அறியமுடிகின்றது.

**தழையாடை பண்புகளும் தன்மைகளும்**

ஒவ்வொரு திணைக்குரிய தழைகள் ஆடையாகத் தொடுக்கப்பட்டாலும் பலவிடங்களில் மலர்கள் கலந்தும் கட்டப்பட்டுள்ளன. தழையாடையானது ஆம்பல், குவளை, நெய்தல், அசோகு, நொச்சி ஆகியவற்றின் தழைகளாலோ, மலர்களாலோ இரண்டும் கலந்தோ கோர்க்கப்பட்டிருந்தன.

'கொய்தழை' கொண்டு செய்யும் ஆடைகள் விசேடமானவை, நறுக்கி மட்டம் செய்யப்பட்ட தழையாடையே கொய்தழையாகும்.

"முடிந்த குல்லை இலையுடை நறும்பூ
செங்கான் மராஅத்த வாலின் ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழல்குல் திளைப்ப உடீஇ" (திருமுருகு. 201-204)

கஞ்சங்குவளையின் தழை நிரம்பிய பூங்கொத்துக்களையும் சிவந்த மராத்தினது வெள்ளிய கொத்துக்களையும் இணைத்துத் தொடுத்த தழையுடை வடங்கள் திருந்தும் அல்குலிடத்தே அசையும் படி உடுக்கப்பட்டது என்பதை நக்கீரர் கூறுகிறார்.

**முடிவுரை**

சங்க காலத்தில் தழையாடை மணமாகாப் பெண்கள் இடையாடையாகக் கட்டிய ஒரு எளிய ஆடையாக இருந்துள்ளது. விழவு, வழிபாடு, நீராட்டு, விளையாட்டு, தினைப்புனம் காத்தல், திருவிழா, சந்தை, விற்பனை போன்ற பல பொழுதுகளிலும் இளம் மகளிர் தழையுடையை வனப்புடன் அணிந்து மகிழ்ந்துள்ளனர்.

இத்தகைய அடையானது பிற்காலத் தமிழர் வாழ்வில் சடங்கியல் சார்ந்து ஒரு எச்சக் கூறாகத் திருவிழாவில் அம்மனுக்கு வேப்பந்தழை கட்டுதல், மாவிலை கோர்த்தல், தோரணம் தொடுத்தல் என்பது வரை அதன் உள்ளடக்கமானது நீட்சி பெற்று உருமாறி வந்திருக்கிறது. சங்ககாலத் தழையடை ஒரு தொல்குடிக் குறியீடாக நிற்பதைக் காணமுடிகிறது.